STC.No. 1380/2024
நாள் 06.11.2025.
D.W.1 – (ராஜேந்திரன் )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
புகார்தாரர் தரப்பில் **குறுக்கு விசாரணை**

எனக்கு பூர்வீகம் மம்சாபுரம். நானும் புகார்தாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்த நபர்கள் என்றால் சரிதான். என் சகோதரி கிருஷ்ணம்மாளை புகார்தாரர் ஊரைச் சார்ந்த கருப்பையா என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எனக்கு புகார்தாரரை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. தெரியாது. புகார்தாரரை எனக்கு இந்த நீதிமன்றத்திற்கு வந்தபின்தான் தெரியும். புகார்தாரரை முதல் வாய்தா போது நீதிமன்றத்தில் வைத்துப் பார்த்தேன். என் சகோதரியை புகார்தாரர் ஊரில் திருமணம் செய்து கொடுத்ததால் எனக்கும் புகார்தாரருக்கும் நல்ல பழக்கம் என்றால் சரியல்ல. எனக்கு புகார்தாரரை மகாராஜபுரத்தை சேர்ந்த முத்தையா மகன் மனோகரன் தான் முதலில் அறிமுகப்படுத்தி வைத்தார் என்றால் சரியல்ல. எனக்கு மனோகரனை ஒரு 15 ஆண்டுகளாக தெரியும். மனோகரன் எனக்கு உறவினர் ஆவார். அவர் எனக்கு நெல் வாங்கி கொடுப்பார், அதன் மூலம் பழக்கம். நான் 10.10.2022 அன்று புகார்தாரரிடம் 100 மூட்டை நெல் ரூ.2,000/– ஒரு மூட்டை விலை, என பேசி அன்றைய தினமே 100 மூட்டை நெல்களையும் வாங்கி என் வாகனத்தில் எடுத்து சென்றேன் என்றால் சரியல்ல. நான் 45 ஆண்டுகளாக நெல் வியாபாரம் செய்கிறேன்.

நான் நெல் வியாபாரம் ரொக்கத்திற்கு செய்வேனா அல்லது கடனிற்கு செய்வேனா என்றால் பெரும்பாலும் ரொக்கத்திற்கு செய்வேன். சில வியாபாரம் கடனிற்கு வாங்குவேன். நான் புகார்தாரரிடம் 100 மூடை நெல்லை கடனிற்கு வாங்கிவிட்டு பு.சா.ஆ.2 காசோலையை புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் நான் புகார்தாரரிடம் இந்த காசோலையை கொடுக்கவில்லை. மனோகரனிடம் 1000 மூடை நெல் வாங்கி தரக் கேட்டு 2 காசோலைகள் கொடுத்துள்ளேன். அன்றே ஒரு காசோலையை மனோகரன் திருப்பி கொடுத்துவிட்டார். பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள கையொப்பம் மட்டும்தான் என்னுடையது. நான் மனோகரனுக்கு கொடுத்ததாக சொல்லும் காசோலைகள் எந்த வங்கி காசோலைகள் அந்த காசோலைகளின் எண்கள் விபரத்தை என் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. என் முதல் விசாரணையில் நான் மனோகரனிடம் எந்த தேதியில் காசோலைகள் கொடுத்தேன் என்றும் எந்த தேதியில் அந்த காசோலைகளில் ஒன்றை எந்த தேதியில் திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றும் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி.

நான் தற்போது சொன்னதுபோல் மனோகரன் ஒரு காசோலையை திருப்பி தரவில்லை எனக் கூறி நான் மனோகரனுக்கு எந்த சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரி. காசோலை திருப்பி தரவில்லை என நான்

சொல்வது குறித்து நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஒரு காசோலை சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தமிழில் எழுதுவது வழக்கம். நான் எழுதிய எழுத்தை நான்தான் எழுதினேன் என்று என்னால் பார்த்தால் சொல்லமுடியும். பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது. பு.சா.ஆ.2 காசோலையில் என் கையொப்பம் உள்ளதுபோல், பெயர் மற்றும் தொகை எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள தேதி நான் தான் எழுதினேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள கையொப்பமும் ஏனைய விபரங்களும் வேறுபடுகிறது. பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள வேறுபாடு என நான் குறிப்பிடுவது தொடர்பாக கையெழுத்து நிபுணம் கருத்துரைகளுக்கு மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அவ்வாறு நான் சொல்வது போல் வேறுபாடு பு.சா.ஆ.2 காசோலையில் காணப்படவில்லை என்பதாலும் நான்தான் பு.சா.ஆ.2 காசோலையை நிரப்பி கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

நான் இராஜபாளையம் கனரா வங்கியை தவிர ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேட் பாங்கிலும் வங்கி கணக்கு வைத்துள்ளேன். வேறு வங்கிகளில் எனக்கு வங்கி கணக்கு இல்லை. எ.சா.ஆ.1 வங்கி கணக்கிற்கும் புகார்தாரருக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரி. எ.சா.ஆ.1 கணக்கு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி கணக்கு என்றால் சரி. எ.சா.ஆ.1 கணக்கு பட்டியலுக்கும் புகார்தாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதால் அந்த ஆவணம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பு.சா.ஆ.2 காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டவுடன் என் வங்கியில் இருந்து அது குறித்து குறுஞ்செய்தி அனுப்பப்படும் என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. சாட்சி குறுஞ்செய்தி வரும் என்றும் பு.சா.ஆ.2 காசோலை குறித்து அவர் குறுஞ்செய்தியை கவனிக்கவில்லை என்று தெரிவித்தார். பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு புகார்தாரர் எனக்கு அனுப்பினார் என்றால் சரி. நான் அதனை படித்து பார்த்தேன் என்றால் சரி. நான் 22.11.2024 அன்று பு.சா.ஆ.4 சட்டஅறிவிப்பை பெற்றுக் கொண்டேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பு.சா.ஆ.4 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு கிடைத்தவுடன் நான் புகார்தாரரை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் 10 நாட்களுக்குள் மனோகரனை பார்த்து சட்ட அறிவிப்பு குறித்து கேட்டேன். பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. எனக்கும் புகார்தாரருக்கும் தாவா காசோலை தொடர்பாக எவ்வித சம்மந்தமும் இல்லை என நான் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் தாவா காசோலை தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் 22.11.2024 அன்று பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பை எடுத்துக் கொண்டு 15.12.2024 வரை எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்பதால் நான் பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு

சங்கதிகளை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா காசோலை தொகை புகார்தாரருக்கு செலுத்த கடமை பட்டுள்ளேன் என்றாலும் நான் புகார்தாரரை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா காசோலையை வழங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள எனக்கும் மனோகரனுக்கும் உள்ள வரவு செலவிற்கும் புகார்தாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

நான் 10.10.2024 அன்று மதுரை அலங்காநல்லூர் அருகே கல்வேலியில் இருந்ததாக சொல்வதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அவ்வாறு நான் அங்கு இருந்ததாக எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் 40 வருடங்களுக்கு மேல் நெல் வியாபாரம் செய்வதால் நான் அழைத்தால் சாட்சி சொல்லவருவார்கள் என்றால் இல்லை. நான் கல்வேலியில் இருந்ததாக சொல்லும் சமயம் என்னுடன் யார் இருந்தார்கள் என்றோ கல்வேலியில் நான் எங்கு இருந்தேன் என்றோ என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.